**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஸ்ரீரங்கம்,**
**முன்னிலை : திரு.K.விஜய் ராஜேஷ், எம்.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஸ்ரீரங்கம்.**

**2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ஆம் நாள், வெள்ளிக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 408/2019**

CNR.NO.TNTP190027572019

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக பெட்டவாய்த்தலை காவல் நிலையம் , காவல் ஆய்வாளர் அவர்கள், குற்ற எண்.15/2013. |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | எதிரி : கிஷோர்கனி (வயது 23 /2013)<br>த/பெ.நாகராஜ் |
| குற்றப்பிரிவு | இ.த.ச. பிரிவுகள் 279, 337, 338,(2 counts) 304(A) (4counts) |
| வனையப்பட்டது | இதச பிரிவுகள் 279, 337, 338,(2 counts) 304(A) (4counts) |
| தண்டிக்கப்பட்டது | **எதிரி ஆஜர் . திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது .**<br>**இறுதியாக, அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 337, 338,(2 counts) 304(A) (4counts) (2counts)-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு.வி.மு.ச 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது .** |
| தீர்மானம் | எதிரி குற்றவாளி இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர் விபரம்

| வ. எண் | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு. கிஷோர்கனி | திரு. நாகராஜ் | இந்து | கூலி | 5/1135 SEF School எதிர்புறம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் | 23/13 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மாவட்டம் | |

**தேதி விவரங்கள்:–**

| | | | |
|---|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 23.01.2013 | |
| புகார் | : | 23.01.2013 | |
| கைது தேதி | : | 05.02.2013 | |
| பிணை விடுவிப்பு | : | 05.02.2013 | |
| Committal | : | N.A | |
| விசாரணை துவக்கம் | : | 31.07.2013 | |
| விசாரணை முடிவு | : | 15.03.2024 | |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | N.A | |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 19.03.2019 | |
| Date of Questioning | : | 03.02.2024 | |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | N.A | |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief | Cross |
| | | (1) 30.07.2019 | 30.07.2019 |
| | | (2) 30.07.2019 | 30.07.2019 |
| | | (3) 23.01.2020 | 23.01.2020 |
| | | (4) 23.01.2020 | 23.01.2020 |
| | | (5) 23.01.2020 | 23.01.2020 |
| | | (6) 23.01.2020 | 23.01.2020 |
| | | (7) 04.02.2021 | 04.02.2021 |
| | | (8) 27.07.2021 | 27.07.2021 |
| | | (9) 27.07.2021 | 27.07.2021 |
| | | (10)27.07.2021 | 27.07.2021 |
| | | (11)27.07.2021 | 27.07.2021 |
| | | (12)05.08.2021 | 05.08.2021 |
| | | (13) 05.08.2021 | 05.08.2021 |
| | | (14) 25.02.2022 | 25.02.2022 |
| | | (15) 01.11.2022 | 01.11.2022 |
| | | (16) 09.11.2023 | 09.11.2023 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 16.11.2023 | |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது | : | Nil | |

| | | |
|---|---|---|
| செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | | |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது திருச்சிராப்பள்ளி நீதித்துறை நடுவர் எண் .3 ல் கடந்த 17.07.2013 ம் தேதியில் CC. No.85/2013 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் மாறுதல் மூலம் கடந்த 11.10.2019 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் பட்டிகை வழக்கு எண்.408/2019 கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 15.03.2024–ம் தேதியன்று விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.ஹரிஹரன், பி.எ., பி.எல்.,** அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

2. **குற்ற முறையீட்டாளரின் சுருக்கம்:–**

கடந்த 02.10.2021–ம் தேதி இரவு சுமார் .30 மணிக்கு வாதி விக்னேஷ்ம் அவரது குடும்பத்தாரும் TN 12 H 8663 Matuthi suzuki swift என்ற காரில் திருச்சி – கரூர் தேசிய நெடுஞ்சாலையில் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி வந்த எதிரியாகிய

WEB COPY

நீங்கள் TN 47 G 0344 SUMO என்ற வாகனத்தினை எதிரியாகிய நீர் அதிகவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து நல்லதம்பி ஓட்டிச் சென்ற டி எண் .45 ஏ ஆர் 1382 டிவிஎஸ் எல் சூப்பர் வண்டியில் மோதியதில் நல்ல தம்பிக்கு மார்பிலிருந்து இடுப்பு வரை சிராய்ந்த காயம் வலது கை , வலது கால் சிதைந்து குடல் வெளியே வந்து சம்பவ இடத்திலேயே இறப்பையும் ஏற்படுத்தியும்,

மேற்படி நல்லதம்பி வண்டியில் உட்கார்ந்து வந்த தேன்மொழிக்கு தலையில் வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டும் , துர்க்காவுக்கு மூக்கில் அடிபட்டு ரத்தம் வந்தும், அவருக்கு பின்னால் வந்த டி எண். 45 வி 7998 டி வி எஸ் 50 யை ஓட்டிவ வந்த காத்தான் என்வருக்கு இடது கால் வலது கால் , மூக்கில் அடிபட்டு காயம் ஏற்பட்டதாகவும், மேற்படி அவருக்கு பின்னால் வந்த டி எண்.48 வி 8476 Hero Honda Splenor Plus இரு சக்கர வாகனத்தை சாட்சி 6 நல்லதம்பி என்பவர், சாட்சி 7 ஜோதியை பின்னால் உட்கார வைத்து ஓட்டி வந்த வண்டி மீது எதிரியாகிய நீர் ஓட்டி வந்த காரால் மோதியதில் சாட்சி 6 நல்லதம்பிக்கு இடதுபக்க நெற்றி , இடது கை , வலது கால் , இடது தோள்பட்டையில் அடிபட்டு கொடுங்காயத்தை ஏற்படுத்தியும்,

மேற்படி சாட்சி 7 ஜோதிக்கு, தேன்மொழி, துர்க்கா, காத்தான் ஆகியோருக்கு தலை , இடது, வலது கால், இடது கை ஆகிய இடங்களில் கொடுங்காயத்தை உண்டு பண்ணியும் மற்றும் நல்லதம்பிக்கு சம்பவ இடத்திலேயே இறப்பையும் ஏற்படுத்திய எதிரியான உமது செய்கையானது சட்டப்பிரிவுகள் 279, 337, 338, (2 counts) 304(A) (4counts) of IPC –ன் கீழ் குற்றம் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இவ்வழக்கின் இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து எதிரி மீது பிரிவு 304(A) IPC–ன் கீழ் நடவடிக்கை தொடர போதிய முகாந்திரம் இருந்ததால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை

அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டு எதிரிக்கு போதிய அவகாசம் கொடுத்து எதிரி மீது பிரிவு 279, 337, 338, (2 counts) 304(A) (4counts) IPC-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **விசாரணை**:-

அரசு தரப்பில் அ .சா.1 முதல் அ .சா 16 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 முதல் அ .சா.ஆ. 23 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது . எதிரி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்** :-

(1) அ.சா.1 **திரு.பாலமுருகன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவளர்சோலையில் வசித்து வருவதாகவும் , தான் ஓட்டுனராக பணிபுரிந்து வருவதாகவும், தனது கொழுந்தியாளுக்கு ஜீயபுரம் அருகே வளைகாப்பு நடைபெற்றதாகவும், இருசக்கர வாகனத்தில் தானும் தனது அண்ணியும் வாகனத்தில் தங்கள் ஊரிலிருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது கார் மோதி விபத்து ஏற்பட்டதகாவும் , மோதியதில் அவர்கள் மூவரும் துக்கி எறியப்பட்டு அதே இடத்திலேயே இறந்துபோய்விட்டார்கள் என்றும், மோதிய ஓட்டுனரை தான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்றும், அந்த கார் இண்டிக கார் என்று நினைத்தாகவும், தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் , தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தனன்னுடையது தான் என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தார் என்றும், அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

VAGAI

(2) அ.சா.2 **திருமதி.கிருத்திகா** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவளர்சோலையில் வசித்து வருவதாகவும், தானும் பாலமுருகன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் ஜீயபுரம் அருகே வளைகாப்பு நடைபெற்றதாகவும் , இருசக்கர வாகனத்தில் தானும் பாலமுருகன் வாகனத்தில் தங்கள் ஊரிலிருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது கார் மோதி விபத்து ஏற்பட்டதகாவும் , மோதியதில் அவர்கள் மூவரும் துக்கி எறியப்பட்டு அதே இடத்திலேயே இறந்துபோய்விட்டார்கள் என்றும் , மோதிய ஓட்டுனரை தான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்றும், அந்த கார் இண்டிக கார் என்று நினைத்தாகவும், இந்த வழக்கு போலீசார் தன்னை விசாரித்ததாகவும், அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்.

(3) அ.சா.3 **திரு. கண்ணன்** தனது சாட்சியத்தில் தான் சிறுகமணயில் வசித்து வருவதாகவும், தான் விவசாயம் செய்து வருவதாகவும் , கடந்த 23.01.2013 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் சிறுகமணி மெயின் ரோட்டில் தான் மற்றும் நான்கு பேரும் நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது ஒரு வெள்ளை நிற கார் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி 4 இருசக்கர வாகனங்கள் வந்தததாகவும், அந்த இருசக்கர வாகனங்களில் ஒரு கணவன் மனைவி பிள்ளைகள் அதற்கடுத்து இருசக்கரவாகனத்தில் ஒருவர் வந்துகொண்டிருந்ததாகவும் , அந்த வெள்ளை நிறக்கார் வேகமாக வந்து நான்கு இருசக்கர வாகனங்களையும் அடுத்தடுத்து மோதிவிட்டு இடது பக்கத்தில் முழுமையாக வலது பக்கத்தில் ஏறிவிட்டதாகவும், அதில் நான்கு பேரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் , காத்தான் என்பவர் அந்த இடத்திலேயே துண்டு துண்டாக சிதறிவிட்டதாகவும் , சிறுகமணியை சேர்ந்த காத்தான் என்பவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்த குழந்தையும் தாயாரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் , மோதிய வண்டியின் ஓட்டுனரை தான் பார்க்கவில்லை என்று அ.சா.3 சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

(4) அ.சா.4 **திரு.கந்தசாமி** தனது சாட்சியத்தில் தான் சிறுகமணயில் வசித்து வருவதாகவும், தான் கூலி வேலை செய்து வருவதாகவும் , கடந்த 23.01.2013 ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் தான் மற்றும் சிலரும் சிறுகமணி மெயின்ரோட்டிற்கு அருகில் நின்று பேசிக்கொண்டிருந்ததாகவும் , அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வேகமாக வந்த கார் திடீரென்று இடது புறத்திலிருந்து வலது புறம் ஏறி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த இருசக்கர வாகனங்களில் மோதியதாகவும், நான்கு இருசக்கர வாகனங்கள் வந்தததாகவும், அதில் ஒரு குழந்தை மற்றும் அதன் தாயார் மற்றும் அடுத்தடுத்த வண்டிகளில் இருவர் என மொத்தம் நான்கு பேர் அங்கேயே இறந்துவிட்டதாகவும் , டம் என சத்தம் கேட்டவுடன் தான் சென்று பார்த்ததாகவும் , அதில் ஒருவர் இரு துண்டுகளாக சிதறி விட்டதாகவும், ஒரு குழந்தை அடித்த வேகத்தில் தூக்கி எறியப்பட்டு தோப்பில் சென்று விழுந்துவிட்டதாகவும் , அதன் பின்பு அடிபட்டவர்களை ஆம்புலன்சில் ஏற்றிச் சென்றுவிட்டதாகவும் , தான் காரை ஓட்டி வந்த நபரை பார்க்கவில்லை என்றும், அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார்.

(5) அ.சா. 5 **திரு.அப்துல்ரகீம்** தனது சாட்சியத்தில் தான் சிறுகமணயில் வசித்து வருவதாகவும், தான் அங்கு பஞ்சர் கடை வைத்திருப்பதாகவும் , கடந்த 23.01.20123 ம் தேதி மாலை 05.30 மணியளவில் சிறுகமணயில் விபத்து நடந்த இடத்தில் ஜீயபுரம் காவல் ஆய்வாளர் வரைபடம் வரைந்ததாகவும் , அதில் தான் சாட்சி கையொப்பம் போட்டதாகவும், தன்னுடன் முருகானந்தம் என்பவர் சாட்சி கையொப்பம் போட்டார் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அ.சா.ஆ.2 என்றும், அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார்.

(6) அ.சா.6 **திரு.முருகானந்தம்** தனது சாட்சியத்தில் தான் எஸ்.புதுக்கோட்டையில் வசித்து வருவதாகவும் , தான் டிரைவராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 23.01.2013 ம் தேதி மாலை 05.00 மணியளவில் தான்

பள்ளி சவாரி சென்று கொண்டிருந்தபோது கூட்டமாக இருந்ததால் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், மேற்படி போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் போட்டதாகவும், தன்னுடன் அப்துல் ரகீம் என்பவரும் கையெழுத்து போட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அ.சா.ஆ.3 என்றும், அ.சா.6 சாட்சியம் அளித்துள்ளார்.

(7) அ.சா.7 **திருமதி.ஜோதி** தனது சாட்சியத்தில் தான் இலால்குடியில் இடையாற்றுமங்கலத்தில் வசித்து வருவதாகவும், தான் ரயில்வேயில் பணிபுரிந்து வருவதாகவும், 23.01.2013ம் தேதியன்று தான் தன் மருகமன் நல்லதம்பியும் இருசக்கர வாகனத்தில் திருப்பலாய்த்துறையிலிருந்து பெட்டவாய்த்தலைக்கு சென்று கொண்டிருந்ததாகவும், மேற்படி 12.00 மணியளவில் சிறுகமணியை தாண்டி செல்லும் போது தங்களுக்கு முன்னால் இரண்டு இருசக்கர வாகனம் சென்றுகொண்டிருந்ததாகவும், அப்போது எதிரே கார் தாறுமாறாக வந்ததாகவும், தங்களுக்கு முன்னால் சென்ற இரண்டு வாகனங்கள் மீது மோதிவிட்டதாகவும், மோதியதில் தனக்கு இடது கை மற்றும் இரண்டு காலிரும் தலையிலும் காயம் ஏற்பட்டதாகவும், தனது மருமகனுக்கு தலை மற்றும் இடது கை, மற்றும் காலில் அடிப்பட்டதாகவும், தன்னைப்போக்கு வண்டியில் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும், மேற்படி தான் தனக்கு தெரிய வந்ததாகவும், தனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தல் சென்ற நான்கு நபர்கள் இறந்துவிட்டதாகவும், தனக்கு ஓட்டுனரை சரியாக ஞாபகமில்லை என்றும், தான் மயக்கமாவிட்டதால் தன்னால் நினைவுக்கு வர முடியவில்லை என்றும், அ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார்.

(8) அ.சா.8 **திரு.பாஸ்கரன்** தனது சாட்சியத்தில் தான் பொன்மலைப்பட்டியில் 5 வது தெருவில் வசித்து வருவதாகவும் , இதற்கு முன்பு கண்டக்டராக பணிபுரிந்து வருவதாகவும், தான் 23.01.2013 ம் தேதியன்று 03.00 மணியளவில் தான் வீட்டிலிருந்த போது தனது மருமகன் போன் சென்று தனது மகனுக்கு சிறுகமணி அருகே விபத்து ஏற்பட்டதாக கூறியதாகவும் , தான் சம்பவம் சென்று என்ன நடந்தது என்று விசாரித்ததாகவும் , ஒரு கார் வேகமாக வந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள் என்றும், தனது மகன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், தன் மகனுடன் சென்ற தேன்மொழி , துர்க்கா, காத்தான் ஆகியோரும் விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாகவும் , பிறகு அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணையின் போது தான் உடனிருந்ததாகவும் , அ.சா.8 சாட்சியம் அளித்துள்ளார்.

(9) அ.சா.9 **திரு.செல்வம் @ மாமுண்டி** தனது சாட்சியத்தில் தான் திருவளர்சோலையில் வசித்து வருவதாகவும் , கடந்த 23.01.2013 ம் வருடம் மதியம் 03.00 மணியளவில் தனது உறவினர் ஒருவர் போன் செய்து தனது மனைவிக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள் என்றும் , தான் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாகவும், அங்கு அவர் இறந்துவிட்டதாகவும், பிறகு அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணையின் போது தான் உடனிருந்ததாகவும், அ.சா.9 சாட்சியம் அளித்துள்ளார்.

(10) அ.சா.10 **திரு.குமார்** தனது சாட்சியத்தில் தான் திருவளர்சோலையில் வசித்து வருவதாகவும், தான் டிரைவர் வேலை செய்து வருவதாகவும் , கடந்த 23.01.2013 ம் வருடம் மதியம் 03.00 மணியளவில் தான் வீட்டிலிருந்த போது சிறுகமணியிலிருந்து தனக்கு தெரிந்த நபர் போன் செய்து தன் உறவினர் தேன்மொழிக்கு விபத்து ஏற்பட்டதாக கூறியதாகவும் , தான் விசாரித்த போது இருசக்கர வாகனத்தில் தேன்மொழி, துர்க்கா, நல்லதம்பி ஆகியோர் கிழக்கில் இருந்து மேற்கே சென்று கொண்டிருந்த போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி

வந்த கார் அவர்கள் மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே அனைவரும் இறந்துவிட்டதாகவும், அதே போல் அந்த காரானது தேன்மொழி சென்ற வண்டிக்கு பின்னால் வந்து கொண்டிருந்த காத்தான் என்பவரது இருசக்கர வாகனத்தில் மீது மோதி விபத்து ஏற்பட்டத்தில் காத்தானும் இறந்துவிட்டதாகவும், மேற்படி தேன்மொழி பிரேத விசாரணையின் போது தான் உடனிருந்ததாகவும் அ.சா.10 சாட்சியம் அளித்துள்ளார்.

(11) அ.சா.11 **திரு.மகாமுனி** தனது சாட்சியத்தில் தான் திருவளர்சோலையில் வசித்து வருவதாகவும், தான் வார்டனாக வேலை செய்து வருவதாகவும், கடந்த 23.01.2013 ம் வருடம் மதியம் 03.00 மணியளவில் தான் வீட்டிலிருந்த போது ஊர்க்காரர்கள் பதறி அடித்துக்கொண்டு செல்வம் மனைவி தேன்மொழி மற்றும் பேத்தி துர்க்கா சிறுகமணி அருகே சாலை விபத்து நடந்ததாக கூறியதாகவும், விபத்து எப்படி நடந்தது என்று கேட்டதற்கு சிறுகமணி அருகே வந்த கார் மோதி 4 பேர் இறந்துவிட்டதாகவும் தேன்மொழி பிரேதத்தின் போது தான் உடனிருந்ததாகவும் அ.சா.11 சாட்சியம் அளித்துள்ளார்.

(12) அ.சா.12 **திரு.சதிஸ்குமார்** தனது சாட்சியத்தில் சிறுகமணி கிராமத்தில் வசித்து வருவதாகவும், தான் எலெக்ட்ரிக்கல் வேலை செய்து வருவதாகவும், கடந்த 23.01.2013 ம் வருடம் தனக்கு 03.00 மணியளவில் தொலைபேசி மூலம் தனது உறவினர் ராஜ் தனது அப்பா விபத்தில் இறந்துவிட்டதாகவும் தான் 03.00 மணிக்கு GH ல் சென்று உள்ளே பார்த்ததாகவும், தனது அப்பா இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் போது சிறுகமணி மெயின் ரோட்டில் ஊரடையன் வீட்டிற்கு எதிரே சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது இறந்துவிட்டதாகவும், மேற்படி 3 நபர்கள் விபத்தின் போது சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், தான் பிரேத விசாரணையின் போது உடனிருந்ததாகவும் அ.சா.12 சாட்சியம் அளித்துள்ளார்.

(13) அ.சா.13 **திரு.சக்திவேல்** தனது சாட்சியத்தில் தான் திருவளர்சோலையில் வசித்து வருவதாகவும், விவசாயம் செய்து வருவதாகவும், 23.01.2013 ம் தேதி தான் திருவளர்சோலையில் இருந்த போது மாலை 03.00 மணியளவில் தனது உறவினர்கள் போன் செய்து தனது மகள் துர்க்கா மற்றும் தன் அத்தை , தேன்மொழி, நல்லதம்பி ஆகியோர் இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சிறுகமணியில் அருகே செல்லும் போது மேற்கிலிருந்து வந்த கார் வலது புறம் ஏறி அவர்க மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும் , மேற்படி தனது மகள் துர்க்காவின் பிரேத விசாரணையின் போது தான் உடனிருந்ததாகவும் அ.சா.13 சாட்சியம் அளித்துள்ளார்.

(14) அ.சா.14 **திருமதி.சித்ரா** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருப்பூர் மாவட்டம் அவினாசி பகுதி அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 2013 ம் ஆண்டு ஸ்ரீரங்கம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்தபோது 05.02.2013 அன்று மதியம் 2 மணி அளவில் அலுவலகத்தில் முன்பு பெட்டவாய்த்தலை காவல் நிலைய குற்ற எண் .15/2013 வழக்கில் ஜீயபுரம் காவல் ஆய்வாளர் வேண்டுகோளுக்கு இணங்க வாகன எண் .TN 40 D.5577 என்ற இலகுரக வாகனத்தை ஆய்வு செய்ததாகவும், மேற்படி ஆய்பு செய்தபோது இந்த விபத்தானது இயந்திர கோளாறால் ஏற்படவில்லை என்றும் , அ.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்பு அறிக்கை என்றும் , மேற்படி இருசக்கர வாகனத்தை 12.02.2013 அன்று ஆய்பு செய்தேன் அ.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்பு அறிக்கை என்றும், மேற்படி இந்த விபத்து சம்பந்தபட்ட டி.எண்.45 வி 7998 என்ற இருசக்கர வாகனத்தை 21.03.2013 அன்று அலுவலகத்தில் முன்பு வைத்து ஆய்பு செய்தேன் என்றும், அ.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வறிக்கை என்றும், மேற்படி இந்த விபத்தானது இயந்திர கோளாறால் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன் என்றும் , அ.சா.ஆ.7 என்றும், அ.சா.14 சாட்சியம்

அளித்துள்ளார்.

(15) அ.சா.15 **திரு.செல்வராஜ்** தனது சாட்சியத்தில் தான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும் , கடந்த 2013 ம் ஆண்டு பெட்டவாய்த்தலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 23.01.2013 அன்று 16.00 மணிக்கு தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது பாலமுருகன் த /பெ. அருணாசலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண் .15/2013 சட்டபிரிவுகள் 279, 337, 304 எ இதச படி வழக்கு பதிவு செய்ததாகவும், அ.சா.ஆ.8 அச்சு முதல் தகவல் அறிக்கை என்றும் , மேற்படி பஞ்சாயத்தார் முன்னிலையில் 24.01.2013 அன்று காலை 06.00 மணிக்கு ஆரம்பித்து 08.15 மணிக்கு முடித்ததாகவும் , அ.சா.ஆ.9 காத்தான் பிரேத விசாரணை அறிக்கை என்றும் , அ.சா.ஆ.10 துர்க்காவின் பிரேத விசாரணை அறிக்கை என்றும் , அ.சா.15 சாட்சியம் அளித்துள்ளார்.

(16) அ.சா.16 **திரு.அழகேசன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும் , கடந்த 2013 ம் தேதி ஜீயபுரம் உட்கொட்ட காவல் நிலைய பணியில் இருந்தபோது அ .சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.15/2013 சட்டப்பிரிவு 279, 337, 304 எ இதசவின் கீழ் அறிக்கை பதிவு செய்தததாகவும் , மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிக முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அ.சா.ஆ.11 மாதிரி வரைபடம் , அ.சா.ஆ.12 பார்வை மகஜர் என்றும் , மேற்படி வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்து மேற்படி பிரேத விசாரணை அறிக்கை முறையே அ .சா.ஆ.13 முதல் அ.சா.ஆ.16 வரை என்றும், மேற்படி சாட்சிகளை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும் , மேற்படி 11.30 மணிக்கு எதிரியை கைது செய்து

WEB COPY

ஆஜர் எதிரி செல்வமணி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும் , மேற்படி இறந்து போனவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கை முறையை அ .சா.ஆ.17 முதல் அ .சா.ஆ.20 வரை என்றும், மேற்படி விபத்து ஏற்பட்டவர்களின் காயச்சான்று அ .சா.ஆ.21 என்றும், மேற்படி அ.சா.ஆ.22 ஜோதிக்கு கொடுங்காயம் என்றும், அ.சா.ஆ.23 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று என்றும் , மேற்படி எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் பட்டியல் சாட்சிகள் அனைவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தததாகவும், அ.சா.16 சாட்சியம் அளித்துள்ளார்.

17. **கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு .வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரி அதை மறுத்துக் கூறினார் . எதிரி தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

18. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது எதிரி மீது இசத பிரிவு 279, 337, 338, (2counts), 304(A) (4counts) –ன் கீழ் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

19. **தீர்வு** :–

I) கடந்த 02.10.2021–ம் தேதி இரவு சுமார் .30 மணிக்கு வாதி விக்னேஷ்ம் அவரது குடும்பத்தாரும் TN 12 H 8663 Matuthi suzuki swift என்ற காரில் திருச்சி – கரூர் தேசிய நெடுஞ்சாலையில் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி வந்த எதிரியாகிய நீங்கள் TN 47 G 0344 SUMO என்ற வாகனத்தினை எதிரியாகிய நீர் அதிகவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து நல்லதம்பி ஓட்டிச் சென்ற டி எண் .45 ஏ ஆர் 1382 டிவிஎஸ் எல் சூப்பர் வண்டியில் மோதியதில் நல்ல தம்பிக்கு மார்பிலிருந்து இடுப்பு வரை சிராய்ந்த காயம் வலது கை , வலது கால் சிதைந்து குடல் வெளியே வந்து சம்பவ இடத்திலேயே இறப்பையும் ஏற்படுத்தியும்,

மேற்படி நல்லதம்பி வண்டியில் உட்கார்ந்து வந்த தேன்மொழிக்கு தலையில் வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டும் , துர்க்காவுக்கு மூக்கில் அடிபட்டு ரத்தம் வந்தும், அவருக்கு பின்னால் வந்த டி எண். 45 வி 7998 டி வி எஸ் 50 யை ஓட்டிவ வந்த காத்தான் என்வருக்கு இடது கால் வலது கால் , மூக்கில் அடிபட்டு காயம் ஏற்பட்டதாகவும், மேற்படி அவருக்கு பின்னால் வந்த டி எண்.48 வி 8476 Hero Honda Splenor Plus இரு சக்கர வாகனத்தை சாட்சி 6 நல்லதம்பி என்பவர், சாட்சி 7 ஜோதியை பின்னால் உட்கார வைத்து ஓட்டி வந்த வண்டி மீது எதிரியாகிய நீர் ஓட்டி வந்த காரால் மோதியதில் சாட்சி 6 நல்லதம்பிக்கு இடதுபக்க நெற்றி , இடது கை , வலது கால் , இடது தோள்பட்டையில் அடிபட்டு கொடுங்காயத்தை ஏற்படுத்தியும்,

மேற்படி சாட்சி 7 ஜோதிக்கு, தேன்மொழி, துர்க்கா, காத்தான் ஆகியோருக்கு தலை, இடது, வலது கால், இடது கை ஆகிய இடங்களில் கொடுங்காயத்தை உண்டு பண்ணியும் மற்றும் நல்லதம்பிக்கு சம்பவ இடத்திலேயே இறப்பையும் ஏற்படுத்திய எதிரியான உமது செய்கையானது சட்டப்பிரிவுகள் 279, 337, 338, (2 counts) 304(A) (4counts) of IPC–ன் கீழ் குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

ii) அ.சா.1 புகார் சாட்சியான பாலமுருகன் தனது சாட்சியத்தில் புகாரை தான் எழுதவில்லை என்றும், என் உடனிருந்த உறவினர் புகாரை எழுதினார் நான் புகாரை எழுதவில்லை என்றும் , புகாரில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் தான் தன்னுடையது என்று சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

Iii) அ.சா.2 கண்ணுற்ற சாட்சியான தங்கத்துரை தனது சாட்சியத்தில் தான் , விஜய், சத்தியமூர்த்தி ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் பெருகமணியிலிருந்து பெட்டவாய்த்தலை சென்று கொண்டிருந்தபோது தங்களுக்கு எதிரே வந்த TVS XL என்ற இருசக்கர வாகனத்தை மணிகடன் ஓட்டி

வந்து தங்கள் வாகனத்தில் மோதிவிட்டதால் கீழே விழுந்ததில் தங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும் , இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

iv) அ.சா.13 சம்பத்தை கேள்விப்பட்ட நபரான சக்திவேல் தனது சாட்சியத்தில் எனது உறவினர்கள் போன் செய்து தான் சம்பவம் நடந்ததை பற்றி கூறினார்கள் என்றும், மேற்படி இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

v) அ.சா.5 மற்றும் அ .சா.6 பார்வை மகசர் சாட்சிகளான அப்துல்ரகீம் , முருகானந்தம் தனது சாட்சியத்தில் அ .சா.5 பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் , அ.சா.6 பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் , சாட்சியம் அளித்து அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது . பார்வை மகசர் சாட்சிகளான அ .சா.5 மற்றும் அ.சா.6 எங்களை கையெழுத்து போட சொன்னதால் நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றால் ஆமாம் என்று சாட்சியம் அளித்து சம்பவ இடத்தை அரசு தரப்பில் தெளிவுபடுத்தவில்லை என்பது தெரியவருகிறது.

vi) அ.சா.16 இந்த விபத்தானது தன் மாதிரி வரைபடத்தில் காண்பிக்கவில்லை என்றும், மாதிரி வரைபடம் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்ற விவரத்தையும் ஆய்வாளர் குறிப்பிடவில்லை என்பதும் அரசு தரப்பில் சம்பவ இடத்தை மெய்பிக்கவில்லை என்பது தெரியவருகிறது . மேற்படி சம்பவ இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீடு, கடைகளில் உள்ள நபர்களை இந்த வழக்கில் சாட்சிகளாக விசாணை செய்யவில்லை என்பதும் தெரியவருகிறது . மேற்படி

VerdictumIn

சம்பவ இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீடு கடையில் உள்ள நபர்களை இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்பதும் தெரியவருகிறிது . பின்னர் சம்பவத்தை ஏற்படுத்திய வாகனத்தை 05.02.2013 ம் தேதி சுமார் 14 தினங்கள் காலதாமதமாக அனுப்பியது அரசு தரப்பில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேற்படி அ .சா.16 தாக்கல் செய்துள்ள இறுதியறிக்கைக்கு ஆதரவாக அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரி வாகனத்தை அதிவேகமகாவும் , அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பு சாட்சிகள் யாரும் சப்மவத்தை கண்ணுற்ற சாட்சிகள் இல்லை . எதிரி சம்பவத்தின்போது அதிகவேகமாகவும் , அஜாக்கிரதையாகவும் , கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாக அரசு தரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்ட இதச பிரிவுகள் 279, 337, 338 (2 counts). 304(A) ( 4 counts) –ன் கீழ் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

Vii) அ.சா.16 விசாரணை அதிகாரி சாட்சியத்தின் அடிப்படையில் மட்டும் எதிரி குற்றவாளி என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக அரச தரப்பில் எதிரியானவர் பிரிவுகள் 279, 337, 338 ( 2counts) 304(A) ( 4 counts) IPC–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை குற்றவாளி இல்லையென முடிவு செய்து குவிமுச 248(1) ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2024–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–K.விஜய் ராஜேஷ்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

இணைப்பு :

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா 1 : திரு. பாலமுருகன்
அ.சா 2 : திருமதி.கிருத்திகா
அ.சா 3 : திரு.கண்ணன்
அ.சா 4 : திரு.கந்தசாமி
அ.சா 5 : திரு. அப்துல்ரகீம்
அ.சா 6 : திரு.முருகானந்தம்
அ.சா 7 : திருமதி.ஜோதி
அ.சா 8 : திரு.பாஸ்கரன்
அ.சா 9 : திரு.செல்வம் @ மாமுண்டி
அ.சா 10 : திரு.குமார்
அ.சா 11 : திரு.மகாமுனி
அ.சா 12 : திரு.சதிஸ்குமார்
அ.சா 13 : திரு.சக்திவேல்
அ.சா 14 : திருமதி.சித்ரா (மோட்டர் வாகன ஆய்வாளர்)
அ.சா 15 : திரு.செல்வராஜ் ( காவல் உதவி ஆய்வாளர்)
அ.சா 16 : திரு.அழகேசன் (காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர்)

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ. 1 : 30.07.2019 புகார் மனு
அ.சா.ஆ. 2 : 23.01.2020 பார்வை மகஜரில் உள்ள அ.சா.5 ன் 1 வது கையெழுத்து மட்டும்
அ.சா.ஆ. 3 : 23.01.2020 பார்வை மகஜரில் உள்ள அ.சா.6 ன் 2 வது கையெழுத்து மட்டும்
அ.சா.ஆ. 4 : 25.02.2022 மோட்டார் வாகன ஆய்வறிக்கை
அ.சா.ஆ. 5 : 25.02.2022 மோட்டார் வாகன ஆய்வறிக்கை
அ.சா.ஆ. 6 : 25.02.2022 மோட்டார் வாகன ஆய்வறிக்கை
அ.சா.ஆ. 7 : 01.11.2022 மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிதழ்
அ.சா.ஆ.8 : 01.11.2022 அச்சு முதல் தகவல்அறிக்கை
அ.சா.ஆ.9 : 01.11.2022 காத்தான் பிரேத விசாரணை அறிக்கை
அ.சா.ஆ.10: 01.11.2022 துர்கா பிரேத விசாரணை அறிக்கை
அ.சா.ஆ.11: 09.11.2023 மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.12: 09.11.2023 பார்வை மகஜர்
அ.சா.ஆ.13: 09.11.2023 பிரேத விசாரணை அறிக்கை
அ.சா.ஆ.14: 09.11.2023 பிரேத விசாரணை அறிக்கை
அ.சா.ஆ.15: 09.11.2023 பிரேத விசாரணை அறிக்கை
அ.சா.ஆ.16: 09.11.2023 பிரேத விசாரணை அறிக்கை
அ.சா.ஆ.17: 09.11.2023 பிரேத பரிசோதனை அறிக்கை
அ.சா.ஆ.18: 09.11.2023 பிரேத பரிசோதனை அறிக்கை
அ.சா.ஆ.19: 09.11.2023 பிரேத பரிசோதனை அறிக்கை
அ.சா.ஆ.20: 09.11.2023 பிரேத பரிசோதனை அறிக்கை

Web Copy

அ.சா.ஆ.21: 09.11.2023 காயச்சான்று
அ.சா.ஆ.22:09.11.2023 காயச்சான்று
அ.சா.ஆ.23: 09.11.2023 காயச்சான்று

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்கள்:-இல்லை

எதிரி தரப்பில் சாட்சிகள் :- இல்லை

எதிரி தரப்பில் சான்றாவணம் :- இல்லை

(ஒம்/-K.விஜய் ராஜேஷ்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்

நகல்கள்

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள் , திருச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2. அரசு தரப்பில் உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை எண்.1, ஸ்ரீரங்கம்

3. காவல் ஆய்வாளர், ஸ்ரீரங்கம் காவல் நிலையம்.

குறிப்பு

அரசு தரப்பு சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.

Adobe